# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.09.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்)
# (திருத்தம்)

***(25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்)***
**கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பால்நிலைசார் நடுநிலைத்தன்மை உடையனவாக்குவதற்காகும்.

***வாசகம் 3:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பால்நிலைகள் நடுநிலைத்தன்மை உடையவை ஆக்குவதற்காகும்.

***வாசகம் 4:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது "இளம் ஆள்" சொல்லமைப்பை பதினெட்டு வயதை அடைந்துள்ளவரும் இருபத்தியிரண்டு வயதை அடையாதவருமான ஆள் ஒருவராக மீள்வரையறுப்பதற்குமாகும்.

## இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தம்)

*ச. வ.- ஒ. 27/2019*

### *(25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

இருபத்தைந்தாம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**2.** இதனகத்துப்பின்னர் (“முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் “ஆண் ஆகவுள்ள எவரேனும் ஆள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “எவரேனும் ஆள்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் “ஆண் ஆகவுள்ள ஆள் ஒருவர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஆள் ஒருவர்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

இருபத்தைந்தாம் அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**4.** (25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டம் ஆனது அதன் 16 ஆம் பிரிவில் “இளம் ஆள்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“ “இளம் ஆள்” என்பது பதினெட்டு வயதை அடைந்துள்ளவரும் அத்துடன் இருபத்தியிரண்டு வயதை அடையாதவருமான ஆள் ஒருவர் எனப் பொருள்படும்; என்பதுடன், “இளந்தவறாளர்” என்பது அதனது நேரொத்த கருத்தைக் கொண்டுள்ளது”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.